ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1646/3 - 2010 මාර්තු 22 වැනි සඳුදා - 2010.03.22
*1646/3 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் பசறை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

இறந்ததன் காரணமாக பசறை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

திரு. அனவலங்கு முதியன்சேலாகே நிமல் ரூபசேன ராஜகருணா எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டிய அக் கட்சியைச் சேர்ந்தவரும், பசறை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. திசாநாயக முதியன்சேலாகே கலுபண்டா என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும்.

இப்போது பசறை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் தலங்கம அப்புகாமிலாகே சமிந்த நாமல் தலங்கம ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. திசாநாயக முதியன்சேலாகே கலுபண்டா என்பவர், பசறை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

டீ. ஏ. சீ. என். தலங்கம,
தெரிவத்தாட்சி அலுவலர்,
பசறை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
பதுளை,
2010, மாச்சு 10.

4 - 197

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.